சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 8133/ அ5/ 2022 நாள். 24.11.2022

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-06, 2022-2023 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் - மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்குதல் தொடர்பான அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள் -வழங்கியது- நடைமுறைப் படுத்திட தெரிவித்தல் - தொடர்பாக

பார்வை சென்னை-06, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண். 023573/எப்1/2022 நாள்.24.11.2022

..............

மேற்காண் பொருள் சார்பாக பார்வையில் காண் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்துடன் பெறப்பட்ட அறிவுரைகள்/நெறிமுறைகள் விவரம் இத்துடன் இணைத்து அரசு/சென்னை/உதவி பெறும்/மெட்ரிகுலேசன் - மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்/ பள்ளி முதல்வர்களுக்கு அனுப்பப்படுகிறது.

அறிவுரை மற்றும் நெறிமுறைகளை தவறாது பின்பற்றி எந்தவித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம்/பாகுபாடு இன்றி சார்ந்த பாட ஆசிரியர்களால் அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் ஒதுக்கீடு செய்திடுவதை தலைமையாசிரியர்கள்/பள்ளி முதல்வர்கள் உறுதி செய்திடல் வேண்டும்.

மேலும் நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் அகமதிப்பீடு மதிப்பெண்கள் விவரப் பதிவேடு பராமரித்திடல் வேண்டும்.

அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் ஒதுக்கீடு சார்பான அறிவுரை மற்றும் நெறிமுறைகளின் நகலினை அனைத்து மேல்நிலை வகுப்பு பாட ஆசிரியர்களுக்கு வழங்கிட தெரிவிப்பதுடன் அதன் விவரங்கள் மேல்நிலை வகுப்பு பயின்று வரும் அனைத்து மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் கூட்டம் நடத்தி முழுமையாக வாசித்து காட்டிடல் வேண்டும்.

மதிப்பெண் ஒதுக்கீடு செய்வதில் புகார் ஏதும் பெறப்படின் சார்ந்த பாட ஆசிரியர் மீதும் அதனை நிவர்த்தி செய்திட நடவடிக்கை எடுத்திடாத தலைமையாசிரியர் மீதும் விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

இணைப்பு. பார்வையில் காணும் கடித நகல் மற்றும் அறிவுரை/ நெறிமுறைகள்

24/11

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

24/11/22

பெறுநர்

தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் அரசு/சென்னை/உதவி பெறும்/ஆங்கிலோ இந்தியன் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள், சென்னை மாவட்டம்.

நகல்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம் (பள்ளிப் பார்வையின் போது மதிப்பெண் ஒதுக்கீடு தொடர்பான பதிவேடுகள் பள்ளிகளில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்திடல் வேண்டும்.)

Scanned with OKEN Scanner